**தலைப்பு 208- தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஜுலை 09 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்..

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 10,800,000,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் அரச நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கான 2018 திசெம்பர் 31 திகதி இலக்கம் 04/2018 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை வழிகாட்டியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு திணைக்களத்தின் 2023 செப்டம்பர் 07 திகதிய கடிதம் மூலம் புதிய மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கிடைத்த பின்னர் திருத்திய பெறுமதியின் பிரகாரம் கணக்கீடு செய்வதென. | கணக்குகளை தயாரிக்கும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 06 திகதிய இலக்கம் அ.ப/23/2229/620/032-11 கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் இரண்டு நூற்றாண்டுகளிற்கு முன்னர் நெதர்லாந்திற்கு எடுத்துச் சென்ற கண்டி இராட்சிய காலத்திற்குரிய 06 தொல்பொருட்களை மீண்டும் இலங்கைக்கு ஒப்படைக்கும் போது அவற்றை அதை ரூபா 2,019,460,000 இற்கு மதிப்பிட்டு வெளிநாட்டு மானியமாக கருதி நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | நெதர்லாந்து அரசினால் மீண்டும் இலங்கைக்கு வழங்கிய தொல்பொருட்களின் மதிப்பீட்டு பெறுமதியை மானியமாக கணக்கீடு செய்ய திறைசேரியினால் தீர்மானித்து அதற்கான ஏற்பாட்டை வழங்கியது. அவ்வாறே, திறைசேரியினால் அந்த கணக்கீட்டும் மேற்கொள்ளப்பட்டது. | இலங்கையிலிருந்து பரித்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை வெளிநாட்டு மானியமாக கருத முடியாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டுவரும் ரூபா 1,770,000 தொகையான செலவின ஏற்பாட்டில் ரூபா 1,564,437 தொகை எஞ்சியிருந்ததுடன், அந்த சேமிப்பு அங்கீகார ஏற்பாட்டின் 88 சதவீதமானது. | வாகனங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ள ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு பெறுகைகள் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கான அங்கீதாரத்தை பெற்றுக் கொள்ள அமைச்சிற்கு அனுப்பிய போதும் அமைச்சு பயன்படுத்திய பழைய வாகனமொன்றை திணைக்களத்திற்கு வழங்குவதாக அறிவித்திருந்தது. | உரிய ஆய்வுடன் கூடியதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94 (1) பிரகாரம் ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படக்கூடாத போதும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் 03 செவின விடயங்களிற்காக ரூபா 68,572 ஆன ஏற்பாடுகள் சேமிப்பை விஞ்சி ரூபா 700,025 ஆன பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்த காரணத்தால் சேமிப்பை விஞ்சிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 631,453 ஆனது. | 2022 ஆண்டில் திட்டமிடாதவாறு 2023 ஆண்டு தேசிய சுதந்திர தின விழா, தேசிய வெசாக் விழா, நடமாடும் கண்காட்சி, நெதுங்கமுவ யானையை நிர்மாணித்தல், மற்றும் நெதர்லாந்து அரசின் ரிஸ்க் நூதனசாலையில் வைத்திருந்த இலங்கைக்குரிய கண்டி இராட்சிய காலத்தில் திருடிய 06 தொல்பொருட்களை மீண்டும் இலங்கைக்கு ஒப்படைத்தல் போன்ற விழாக்களை விரைவில் ஒழுங்குபடுத்த நேரிட்ட காரணத்தால் அங்கீகார ஆளணியினரின் வெற்றிடங்களும் அதிகமாக காணப்பட்டதால், இருக்கின்ற ஊழியர்களை பயன்படுத்தி மேலதிக நேர படிகளை செலுத்த நேரிட்டதால் ஏற்பாட்டு சேமிப்பை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்பட நேரிட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாட்டு எல்லைகளை விஞ்சாதவாறு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதென. |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வு மாதிரி பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | அவதானிப்பு பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| | XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் இலக்கம் 3.1 மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 113(6) | 1,000,958 | 2023 திசெம்பர் 31 திகதிக்கு சேவையை விட்டுச் சென்ற 11 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,000,958 ஆன கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரின் இலக்கம் CA/1/1/24/2 மற்றும் 2024.03.05 திகதிய கடிதம் மூலம் ஒரு ஊழியரின் கடன் மீதியான ரூபா 1437.00 தொகையை பதிவழிக்க அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 756 | - | 2023 திசெம்பர் 31 திகதிக்கு 10 பிராந்திய நூதனசாலைகளில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டு இருக்கவில்லை லை. | 2022 ஆண்டில் அனைத்து நூதனசாலைகளில் மற்றும் பிரிவுகளில் உரியவாறு தொல்பொருட்கள் கணிப்பீடொன்றை மேற்கொண்டு அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது 2024 ஆண்டிற்காக நூதனசாலைகளில் மற்றும் பிரிவுகளில் | தொல்பொருட்களை பாதுகாப்பாக மற்றம் இலகுவாக பௌதீக ரீதியாக கணிப்பீடு செய்ய முடியுமானவாறு நவீன முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டுமென. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொல்பொருட்கள் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொள்ள கணிப்பீட்டுச் சபைகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது குறித்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | |
| (iii) | 2023 ஒக்டோபர் மாதம் 05 திகதிய இலக்கம் அ.ப/23/1491/620/019-1 கொண்ட அமைச்சரவை தீர்மானம் | - | இலங்கை கைப்பணிகள் சபையினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த கட்டிடத்தை மீண்டும் தேசிய நூதனசாலை திணைக்களத்திற்கு ஒப்படைத்தல் மற்றும் நிலுவை குத்தகை வாடகையை தீர்ப்பதற்கான 2023 ஆகஸ்ட் 23 திகதிய PFD/RED/REG/CM/2023/305 கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 03 பந்தியின் 3.1 உப பந்தி பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டிடத் திணைக்களத்தினால் லக்சல நிறுவனம் குறித்த கட்டிடத்தை நவீனமயமாக்குவதற்கு செலவிட் தொகையை மத்திப்பிட்டு அறிக்கை வழங்கியுள்ளதாகவும், இந்த திணைக்களத்திற்கு லக்சல நிறுவனத்திலிருந்து உடன்படிக்கை பிரகாரம் அறவிட வேண்டிய நிலுவை தொகையையும் கணக்கிட்டு உள்ளதாகவும், கட்டிடத்தை லக்சல நிறுவனத்தினால் பயன்படுத்தி ஒப்படைக்கும் போது ஏற்பட்டுள்ள நட்ட சேதங்களிற்காக திருத்தங்களை மேற்கொள்ள தேவையான மதிப்பீடும் கட்டிடத் திணைக்களத்தில் இருந்து கிடைத்துள்ளதாகவும், அதன் பிரகாரம் லக்சல நிறுவனத்திடம் இருந்து இந்த நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய தொகையை தீர்மானித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிலுவை வாடகையை கணக்கிட்டு அறவிட வேண்டியதாக. |

**2.4 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 சனவரி முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரை காலி சமுத்திர நூதலசாலையின் நுழைவுச் சீட்டு வருமானத்தை வங்கியில் வைப்புச் செய்யும் போது ஏற்பட்டுள்ள நிதி மோசடி தொடர்பாக 2023 மே 31 திகதி சமர்ப்பித்துள்ள ஆரம்ப புலனாய்வு அறிக்கை பிரகாரம் திணைக்களம் இழந்துள்ள மொத்த வருமானம் ரூபா 1,652,605 ஆனது. விற்பனை செய்த நுழைவுச் சீட்டு வருமானம் தொடர்பாக தினசரி பதிவேடு சமப்படுத்தல், நிதி வங்கியிலிடலும் மோசடிக்கு பொறுப்பான நிலைய பொறுப்பு அலுவலரினால் மேற்கொண்டிருந்துடன், நிதிப் பிரமாணம் 177(1) பிரகாரம் நிதி தினசரி வங்கியில் இடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறாயினும், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் விசாரணையின் பின்னர் நட்டம் ஏற்பட்ட திகதி முதல் மூன்று மாதாங்களினுள் சமர்ப்பிக்க வேண்டிய முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்கவும், நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103(1)(உ) மற்றும் 110 பிரகாரம் சேதம் தொடர்பான பதிவேட்டில் குறிப்பிட்டு நாளாதுவரையாக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலி சமுத்திர நூதலசாலையின் நுழைவுச் சீட்டு வருமானம் வங்கியில் வைப்புச் செய்யும் போது ஏற்பட்டுள்ள நிதி மோசடி நட்டம் தொடர்பாக இந்த திணைக்கள பிரதான உள்ளக கணக்காய்வாளர் உள்ளிட்ட குழுவின் மூலம் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 1,652,605.00 ஆகும். அத் தொகையை செலுத்துமாறு 2024.05.06 திகதிய கடிதம் மூலம் குறித்த அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக, காலி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளதுடன், அதன் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், குறித்த அலுவலரிற்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நி.பி. 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தவறு மற்றும் மோசடி இடம்பெறாதவாறு உள்ளக கட்டுப்பாட்டை தயாரித்து நாளாதுவரையாக்க வேண்டியதுடன் மற்றும் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் தொல்பொருள் கூட்டு முகாமைத்துவ கொள்கை ஒன்றை 2023 திசெம்பர் மாதம் வரை வெளியிட நடவடிக்கை | நூதனசாலைகளிற்கு அவ்வாறான ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டிக் கோவை ஒன்று இல்லாததுடன், தேசிய நூதனசாலைகள் | தொல்பொருள் கூட்டு முகாமைத்துவம் கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் மொத்த |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. அவ்வாறே இலங்கையினுள் காணப்படும் மொத்த நூதனசாலை தொகுதியையும் ஒழுங்குபடுத்தும் அதிகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் காணப்படும் சட்டத்திற்கு உரிய திருத்தங்களை மேற்கொண்டு நூதனசாலைகள் துறையில் ஒழுங்குபடுத்தல் அதிகாரம் கிடைக்க வேண்டிய தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு அந்த அதிகாரத்தை பெற்றுக் கொள்ளவும் செயற்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் தொல் பொருள் முகாமைத்துவம் (Collection Managenent) செய்வதற்கு கொள்கைகள் கோவையொன்றை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நூதனசாலைகள் தொகுதியையம் ஒழுங்குபடுத்தும் அதிகாரம் கிடைக்கும் வகையில் காணப்படும் சட்டத்தை திருத்த வேண்டுமென. |
| (ஆ) | இலங்கையில் தேசிய நூதனசாலைகள் மற்றும் தொல்பொருட்கள் தொடர்பாக நாட்டிற்கு பொருந்தும் வகையில் தொடர்புபடும் நியமங்கள் மற்றும் வழிகாட்டலை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நூதனசாலைகள் மற்றும் தொல்பொருட்கள் தொடர்பான நியமங்கள் பற்றி விசாரிக்கும் போது நூதனசாலைகளினால் பின்பற்றுவது ICOM நியமங்கள் ஆகும். அங்கத்துவ நாடொன்றாக நாமும் பின்பற்றுவது தேசிய நூதனசாலைகள் கவுன்சில் (ICOM) இனால் வெளியிட்டுள்ள நியமம் என அறிவிக்கப்பட்டுள்ளது | நாட்டிற்கு பொருந்தும் வகையிலான தொல்பொருட்கள் தொடர்பான நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை தயாரிக்கப்பட வேண்டியதென. |

**3.2 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு தேசிய நூதனசாலை வாசிகசாலைக்காக தீ பாதுகாப்பு தொகுதியொன்றை நிறுவுவதற்காக 2021 சனவரி 01 திகதி ரூபா 98,550,000 ஆன கிரய மதிப்பீடொன்றின் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் வேலைகள் 2022 மார்ச் 31 திகதி முடிவுறுத்த வேண்டிய போதும், 2024 ஏப்ரல் மாதமளவிலும் அதன் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு இருக்காததுடன், 2023 திசெம்பர் 31 திகதியன்று அதன் நிதிச் செலவினம் ரூபா 43,153,409 ஆனது. | கொழும்பு தேசிய நூதனசாலை வாசிகசாலைக்காக தீ பாதுகாப்பு தொகுதியொன்றை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை வழங்கிய ஒப்பந்த நிறுவனத்தின் பலவீன செயலாற்றுகையின் மீது ஒப்பந்தத்தை இரத்துச் செய்து பிணைமுறி அறவிடப்பட்டது. எஞ்சிய பணிகளிற்காக புதிய விலைமனு கோரி Thudawe Engineering Service எனும் நிறுவனத்திற்கு 2023 திசெம்பர் 18 திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அப்பணிகள் 2024 ஜுன் 15 திகதியளவில் முடிவடையவுள்ளது. | தீ பாதுகாப்பு தொகுதி நிறுவுவதனை விரைவில் முடிவுறுத்த வேண்டுமென. |

## 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 17 திகதிய இலக்கம் PED/e-GP/Circular/2018 கொண்ட நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் சுற்றிக்கை மற்றும் 2018 ஒக்டோபர் 23 திகதிய இலக்கம் PED/e-GP/Circular/2018 கொண்ட நிதி மற்றும் வெகுசன ஊடாகவியல் அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் இலத்திரனியல் பெறுகைகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொதுச் துறை பெறுகைகளை இலத்திரனியல் பெறுகை முறைமையில் தயாரிப்பது தொடர்பாக அலுவலர்களை பயிற்றுவித்தல் மேற்கொண்டு பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொண்டு செல்வதுடன், 2024.05.31 திகதியளவில் பெறுகைகள் நடவடிக்கை இலத்திரனியல் முறைமையினூடாக மேற்கொள்வதனை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் உயிரியல் விஞ்ஞான கூடத்திற்கு அருகில் காணப்படும் இரண்டாம் மாடியின் இடது பக்கப் பகுதியை முழுமையாக மூடப்பட்டு 2012 ஆண்டு முதல் இதுவரை பொது மக்கள் கண்காட்சியிலிருந்து அகற்றியிருந்ததுடன், தேவையான திருத்தங்களை மேற்கொண்டு பொது மக்கள் கண்காட்சிக்கு திறக்க அல்லது ஆக்கபூர்வ வேறு பணிகளிற்கு இந்த பகுதியை பயன்படுத்த மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் உயிரியல் விஞ்ஞான கூடத்திற்கு அருகில் காணப்படும் இரண்டாம் மாடியின் இடது பக்கப் பகுதியை திருத்தி கண்காட்சிக் கூடத்தை தயாரிப்பதற்காக கடந்த பல ஆண்டுகளாக திட்டமிட்டிருந்த போதும், தேவையான ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள முடியாததால் அந்த திட்டத்தை இதுவரை நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனினும், சிறிய திருத்தங்களை மேற்கொண்டு 2023 ஆண்டு முதல் தற்காலிக கண்காட்சிக்காக அந்த பகுதி பயன்படுத்தப்படுகின்றது. இந்த நூதனசாலைக்கு தயாரித்த பிரதான திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த பகுதிக்குரிய நிலையான கண்காட்சியை தயாரிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வளங்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 11 பிராந்திய நூதனசாலைகளில் மற்றும் திணைக்கள களஞ்சியத்தில் காணப்படும் மொத்த தொல்பொருட்களை நியம முறையொன்றை தயாரித்து மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சர்வதேச ரீதியாக தொல் பொருட்களை மதிப்பீடு செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலஉபாயங்கள் இல்லை. நூதனசாலைகளில் தொல் பொருட்களை உரியவாறு ஆவணப்படுத்தி பேணிச் செல்லல் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், தொல் பொருட்கள் காணப்படும் இடத்திலிருந்து வெளிநாடொன்றிற்கு எடுத்துச் செல்லும் போது அவற்றை காப்புறுதி செய்ய மாத்திரம் பொதுவான மதிப்பீடொன்று செய்யப்படுகின்றது. தேசிய ரீதியாக தொல் பொருட்களை மதிப்பிடும் முறைமையொன்றை தயாரிப்பதெனில் அதன் பிரகாரம், இது தொடர்பாக தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கும் நடவடிக்கை எடுக்க இயலுமென. | தொல்பொருட்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையொன்றின் பிரகாரம் மதிப்பீடு செய்ய வேண்டுமென. |

### 3.5 நட்டம் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு தேசிய நூதனசாலையில் 2012 மார்ச் 16 திகதி இடம்பெற்ற மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,440,140 ஆன 221 தொல் பொருட்கள் திருட்டு இடம்பெற்று 2023 திசெம்பர் 31 திகதி வரை 11 வருட காலம் கடந்துள்ள போதும், இறுதி தீர்மானத்தை வழங்க தேவையான சட்டப் பணிகள் மற்றும் அதன் மொத்த நட்டத்தை இனங்கண்டு அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (3) மற்றம் 104 (4) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொழும்பு தேசிய நூதனசாலையில் 2012 மார்ச் 16 திகதி இடம்பெற்ற தொல் பொருட்கள் திருட்டு காரணமாக இடம்பெற்ற நட்டத்தை இனங்காண அமைச்சின் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மூலம் கிடைத்துள்ள பொருட்களிற்கு முத்திரையிடப்பட்டுள்ளது. வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை அப் பொருட்களின் முத்திரையை அகற்றி, அவற்றை திறக்க முடியாததால் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாததென குறித்த குழுவினால் அமைச்சின் செயலாளர் அவர்களிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த சட்ட நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தொல் பொருள் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 1877 ஆண்டு முதல் 1957 வரையான காலத்திற்குரிய 07 வகை தொல் பொருட்களிற்குரிய 7,157 பொருட்கள் காணாமல் போயுள்ளதுடன், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பூரண அறிக்கையொன்றை தயாரித்து காணாமல் போன தொல் பொருட்களை புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் கட்டளையை பெற்றுக் கொள்ள 2024.04.24 திகதி அமைசின் செயலாளரிற்கு சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்த வேண்டுமென மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள புவியியல் பிரிவில் 272 மானிக்கக் கற்கள் இலங்கை வங்கி மெட்ரோபொலிடன் கிளையில் 1964 செப்டம்பர் 18 திகதி முதல் வைப்பு செய்யப்பட்டு காணப்படுவதுடன், 1993 ஆண்டில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவற்றில் ஒரு கல் செயற்கை கல்லென வெளிப்படுத்தப்பட்ட பின்னர் அந்த கல் புவியியல் பிரிவில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. தேசிய மானிக்கம் மற்றும் தங்கநகைகள் அதிகாரசபையின் இரத்தின விஞ்ஞானி ஒருவரின் உதவியை பெற்று இந்த எஞ்சிய 271 மானிக்கங்களின் பெறுமதியை மதிப்பிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மானிக்கற்கள் தொகுதியின் பெறுமதியை மதிப்பிட மானிக்கம் மற்றும் தங்கநகைகள் அதிகாரசபையிற்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதுடன், அவர்களினால் அந்த மானிக்கக்கல் பரீட்சிப்பு மற்றும் மதிப்பீட்டை குறித்த வங்கி வளவில் மேற்கொள்ள முடியாதெனவும், அவற்றை மானிக்கம் மற்றும் தங்கநகைகள் அதிகாரசபையின் இரசாயணகூடத்திற்கு அனுப்ப வேண்டுமென அறிவித்துள்ளது. அவ்வாறே, அது தொடர்பாக திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடியதுடன், திறைசேரி பிரதிநிதி இந்த பொருட்களை மதிப்பீட்டிற்காக வெளி நிறுவனமொன்றிற்கு ஒப்படைப்பது பொருத்தமற்றதென அறிவித்தார். இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் அவர்களின் அங்கீகாரத்தை பெற்று முன்நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதைய நிதிரீதியான பெறுமதியை மதிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டினுள் நூதனசாலை வருமான ஈட்டலை உயர் மட்டத்திற்கு கொண்டுவர திணைக்களம் செயற்பட்டுள்ள போதும் வரலாறு, தொல்பொருளியல் மற்றும் தேசிய மரபுரிமையின் கீழ் தேசிய பெறுமதியுடன் கூடிய இடங்களை பார்வையிட வருகைதரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிற்காக தேவையான உரிய சேவையை வழங்க நூதனசாலை ஊழியர்களை பயிற்றுவித்தல், சுகாதார வசதிகள், ஓய்விடம், சிற்றுண்டிச்சாலை போன்ற வசதிகளை நூதனசாலை வளவினுள் மேம்படுத்துவது தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பல நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள திறைசேரிற்கு சமர்ப்பித்த போதும், வழங்கும் ஏற்பாட்டை மட்டுப்படுத்திய காரணத்தால் மிக்க அவசர மற்றும் முக்கிய விடயங்களிற்கு முன்னுரிமை வழங்க நேரிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென. |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி கொழும்பு மற்றும் கண்டி நூதனசாலைகளை தவிர ஏனைய 09 நூதனசாலைகளில் CCTV கெமரா தொகுதிகள் பொருத்தி இருக்காத காரணத்தால் தொல் பொருட்கள் பாதுகாப்பின்றி காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | முன்னுரிமை பட்டியலின் மீது ஏனைய பிராந்திய நூதனசாலைகளிலும் இந்த CCTV கெமரா தொகுதியை செயற்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொல் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென. |
| (ஈ) | 2019 ஆகஸ்ட் 01 திகதி ஆரம்பித்து 2020 மே 01 திகதி முடிவுறுத்த வேண்டியிருந்த புறக்கோட்டை ஒல்லாந்தர் நூதனசாலையின் பாதுகாப்பு ரீதியான திருத்தம், கால நீடிப்பு 02 சந்தர்ப்பங்களில் வழங்கிய பின்னர் 2021 நவம்பர் 30 திகதி பூர்த்தி செய்ய வேண்டிய போதும், அதற்காக 2022 செப்டம்பர் மாதம் வரை கால தாமதித்ததன் மீது தினந்தோறும் 0.05 சதவீதம் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் அறவிட வேண்டிய தாமதக் கட்டணத்தை கணக்கிட்டு அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புறக்கோட்டை ஒல்லாந்தர் நூதனசாலை கட்டிடத்தின் பாதுகாப்பு ரீதியான திருத்தம் தொடர்பான இறுத் பட்டியல் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் மூலம் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. அதனால் 0.05% தாமதக் கட்டணத்தை அறவிட முடியாதுள்ளது. அவ்வாறே, இந்த கருத்திட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் ரூபா 5,129,564.59 தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், அத் தொகையிலிருந்து தாமதக் கட்டணத்தை அறவிட பொறியியல் நிறுவனமான கட்டிடங்கள் திணைக்களத்திற்கு குறித்த கணக்கிடலை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிட வேண்டுமென. |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 566 ஆன போதும், உன்மையான ஆளணி 391 ஆனதால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 175 ஆனது. இந்த வெற்றிட எண்ணிக்கையில் நிறைவேற்று மட்ட 16 பதவிகளின் 07 பதவிகள் மற்றும் மூன்றாம் மட்டத்திலான 05 பதவிகளின் 04 உம், இரண்டாம் மட்டத்தில் 119 பதவிகளும், ஆரம்ப மட்டத்திலான 45 பதவிகளிளும் உள்ளடங்குவதுடன், அது திணைக்களத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும், வெற்றிடங்களினுள் 11 ஆண்டுகளிற்கும் அதிக காலம் வெற்றிடமாக காணப்படும், மிக பொறுப்புவாய்ந்த பணிப்பொறுப்புக்களை மேற்கொள்ளும் திணைக்களத்திலான பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும் ஆனது. | தற்போது ஆரம்ப மட்ட 92 பதவிகளிற்கு பற்பணி அபிவிருத்தி உதவி அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், மூன்றாம் மட்ட வெற்றிடங்களில் ஒன்றான நிர்வாக உத்தியோகத்தர் பதவி பூரணமாகியுள்ளது. பதவி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள பொது நிர்வாக அமைச்சிடமிருந்து அங்கீகாரம் கிடைக்காததால் மீண்டும் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கைவிடுத்த போதும், இதுவரை பதில் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய சேவை பற்றாக்குறைகளை நிரப்பி நிறுவன செயலாற்றுகையை உயர்த்திக் கொள்ள செயற்பட வேண்டுமென. |
| (ஆ) | தேசிய நூதனசாலையின் தொல் பொருட்கள் தொடர்பாக பொதுப் புரிதலை வழங்குவதற்கு போதுமான பயிற்சி பெற்ற அலுவலர்கள் இல்லாதமை, பூச்சியியல் பிரிவு, விலங்கியல் பிரிவு, தாவரவியல் பிரிவு மற்றும் புவியியல் பிரிவுகள் போன்ற இயற்கை விஞ்ஞான பிரிவுகளின் காணப்பட்ட ஆராய்சிக்காக பயன்படுத்தும் தொல் பொருட்கள் தொகுதியை பராமரித்தல், ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றம் புதிய உருப்படிகளை திரட்டுதல் போன்ற செயற்பாடுகளிற்காக போதிய ஊழியர்களை ஈடுபடுத்தியிருக்காத காரணமாக அந்த பிரிவுகளின் செயற்பாடுகளை பேணிச் செல்வது தொடர்பில் பாதகமான தாக்கம் செலுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அரச சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் குறித்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த ஊழியர் பற்றாக்குறையை நிரப்பி நிறுவனத்தின் செயலாற்றாலை உயர்த்துவதற்கு செயற்பட வேண்டும். |